கவன ஈர்ப்புகள்

(டாக்டர் எச். வி. ஹண்டே)

3. தொழிற் சாலையிலிருந்து வெளிவரும் புகைக்கு சிமென்ட் உலை மற்றும் சிமென்ட் மில் முக்கிய ஆதாரங்களாகும். சிமென்ட் உலை மற்றும் சிமென்ட் மில்லில் எலக்ட்ரோஸ்டாளிக்பிசிபிடேட் டர்களை தொழிற்சாலை அமைத்துள்ளது. தொழிற்சாலை 1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ஆம் நாளன்று பார்வையிடப் பட்டது. எலக்ட்ரோஸ்டாடிக் பிரஸ்பிடேட்டரை இயக்குவதற்கு சில பிரச்சினைகள் உள்ளது என்றும், இந்த எலெக்ட்ரோஸ்டாடிக் கருவிகளை அமைத்துள்ளவர்களிடம் அதன் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்சாலை கூறியுள் ளது.

4. எனினும் இது சம்பந்தமாக கேரள அரசுடனும் கேரள மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்துடனும் தொடர்பு கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வாளையார் பகுதியிலுள்ள மலபார் சிமென்ட் ஆலை துவங்கிய நாளிலிருந்து தூசி பரவி அங்கே வாழ்கின்ற விவசாயி களுக்கும், விவசாய நிலங்களும், கால்நடைகளும் பாதித்து வருவ தால், அந்த ஆலையிலுள்ள இயந்திரங்களை இயக்க சில பிரச் சினைகள் இருப்பதாக விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த இயந்திரங்களைப் பழுதுபார்த்து சரிசெய்த பின்புதான் ஆலையே ஓட்டப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேரள அரசை வற்புறுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத் தவரையிலே விவர அறிக்கையில் எல்லா விவரங்களும் இருக் கின்றன. இது சம்பந்தமாக கேரள மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

(35) வைகை நதியில் மதுரை நகர சாக்கடை நீர் கலப்பது குறித்து.

*திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, " மதுரையில் வைகை நதியில் சாக்கடை நீரும் தொழிற் சாலைகளின் கழிவுநீரும் கலப்பதால் ஏற்படுகின்ற சுகாதாரக்கேடு குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

கவன ஈர்ப்புகள்

மாண்மிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரை நகரின் தற்போதைய ஜனத்தொகை 8,83,300 ஆக உள்ளது. வைகை நதி மதுரை நகரை தெற்கு, வடக்கு என இரு பிரிவுகளாக பிரிக்கிறது. தென் பகுதியில் உள்ள வீடுகள், கடைகள் முதலியவற்றிலிருந்து வெளிவிடப்படும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு, அவன்யாபுரத்தில் கின்னியா புல் வளர்க்க பயன்படுத்தப்படுகிறது.

வட பகுதியில் உள்ள வீடுகள், கடைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு, காற்றில் தொட்டிகளில் சுத்திகரிக்கப்பட்டு, சாத்தமங்கலத்தில் பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. பார்வையிட்டபோது, வைகை ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ள சிலைமான், வரகனூர், தெப்பக்குளம் பகுதி, குருவிக்காரன் சாலை, சிம்மக்கல் மற்றும் கோச்சடை பகுதி கழிவுநீர் பொறியியல் நிறுவனம், கைவினை காகிதம் தயாரிக்கும் நிறுவனம், சாய தொழிற்சாலை, அரிசி ஆலைகள் முதலியவற்றில் இருந்து வரும் தொழிற்சாலைக் கழிவு நீர் ஆற்றில் விடப்படுவது தெரிய வந்தது. ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சாத்தமங்கலம், வண்டியூர், செவிலூர் கல்பாலம் தத்தனேரி பகுதியிலுள்ள கழிவுநீர், பால் பண்ணை மற்றும் ஆஸ்பத்திரி இவற்றிலிருந்து வெளியாகும் கழிவு நீர் வைகையில் கலப்பது தெரிய வந்தது. சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வைகையில் கலக்கிறது. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், ஆற்றில் விடப்பட்டால் நிலத்தடி நீரிலும், நீர் நிலைகளிலும் மாசு ஏற்படலாம்.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தில் 26-வது பிரிவின்படி மதுரை மாநகராட்சி மற்றும் பிற தொழிற்சாலைகள் கழிவுநீர்/தொழிற்சாலை கழிவுநீரை வெளியிட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதியை பெற வேண்டும். மதுரை மாநகராட்சி மற்றும் பால் பண்ணை சாயத் தொழிற்சாலை போன்ற நிறுவனங்கள் கழிவுநீர், தொழிற்சாலை கழிவுநீர், வெளியிட வாரிய அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளன. மதுரை மாநகராட்சியும் தொழில் நிறுவனங்களும் கழிவுநீரை சுத்திகரிக்கும் முறை பற்றிய கருத்துருக்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள தொழிற்சாலைகளும் வாரியத்தின் அனுமதி கோருமாறு நிர்பந்திக்கப்பட்டுள்ளன. மதுரை மாநகராட்சி மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும்போது வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற

கவன ஈர்ப்புகள்

(டாக்டர். எச். பி. ஹண்டே)

வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும். மதுரை மாநகராட்சி மற்றும் தொழில் நிறுவனங்களில் எடுத்துள்ள நடவடிக்கைகள் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவை முன் வைத்துள்ள அறிக்கையில் வைகை நதியினுடைய தென் புறமும், வட புறத்தில் இருக்கின்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீர் வைகை நதியில் கலக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டு உள்ளார்கள் அது மட்டும் அல்லாமல், ஆற்றில் விடப்படுகின்ற அந்த கழிவு காரணமாக நிலத்தடி நீர், மற்றும் நீர் நிலைகளில் மாசு ஏற்படுகிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். எனவே இந்த நிலையை போக்க ஏற்கனவே கழிவு நீரை இந்த வைகை ஆற்றில் விடுகின்ற தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் மேலும் அப்படி இதுவரை எவ்வளவு தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் 3 பகுதிகள் இருக்கின்றன. (Madurai Corporation, Industrial Units of Dairy Development Corporation Dyeing Units) என்று 3 பகுதியாக இருக்கின்றன. இதிலே (Dyeing ueit Dairy Co po ati n, Madu ai Co po ation) பொறுத்த வரையில் நாம் உடனடியாக (Effluents) ஐ-சுத்திகரித்து வெளியே அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு கொஞ்சம் அவகாசம் கொடுத்து இருக்கிறோம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? நோட்டீஸ் கொடுக்கப்படும்.

Madurai Corporation Industrial Units of Dairy Devel pment Corporation) இப் பகுதிகளைப் பொறுத்த வரையில் மதுரை கார்ப்பரேஷனுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். அந்த கார்ப்பரேஷன் அதை சுத்திகரித்த பிறகு தான் வெளியே கழிவு நீரை விடவேண்டும் என்றுசொல்லியிருக்கிறோம். அவர்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

(36) சேலம் ஆத்தூரில் ஏற்பட்ட லாரி விபத்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஒரு பீடா கடைக்குள் லாரி புகுந்ததால், ஸ்தலத்திலேயே இரண்டு பேர் இறந்தும் பலபேர் காயம் அடைந்ததால் அப்பகுதி மக்களிடையே ஏற்